***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 99/2019 - P.W. 2 LW-6***

| | |
|---|---|
| *Name* | ஸ்ரீதர் |
| *Father/Husband's Name* | கலியபெருமாள் |
| *Village* | மன்னுர்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

**1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.07.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து LIC ஏஜென்டாக பணி செய்து வருகிறேன். கடந்த 01.11.2018 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மன்னார்குடி ருக்மணி குளம்அருகே நான் நின்று கொண்டிருந்தபோது ராகுல்பாண்டியன் என்பவரிமிருந்து போலீசார் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும், அதன் அடிப்படையில் காலை 11.30 மணிக்கு கைப்பற்றப்பட்ட TN 50 S 8583 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதிலும், நானும் நடராஜன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ராகுல்பாண்டியன் என்பவர் அவரது வீடு எங்கு இருக்கிறது என்றோ, அவர் என்ன வேலை பார்க்கிறார் என்றோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். ருக்மணிகுளம் எந்த கரை பகுதியில் என்று போலீசார் ராகுல்பாண்டியன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றதாகவும், வாகனத்தை கைப்பற்றினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் கீழ்கரை . ருக்மணிகுளும்

கீழ்கரையில் 200 மீட்டர் நீளம் உள்ள கரையில் வடக்குப்பகுதியிலா அல்லது தெற்கு பகுதியிலா அல்லது நடு பகுதியிலா என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் யாருடைய வாகனம், எப்போது திருட்டுபோனதாக சொல்லப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 10.11.2018 ஆம் தேதி காணாமல் போன வீரசேகரன் என்பவரின் வாகனம். வீரசேகரன் என்பவர் எனது நண்பரா என்றால் , எனது நண்பர். வாகனத்தை போலீசார் எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்றால் மதுக்கூர் ரோடு, ருக்மணிகுளம். போலீசார் எங்கு வைத்து எழுதினார்கள், எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் என்னிடம் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து போலீசார் சோதனை எதுவும் செய்யவில்லை என்றும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், வீரசேகரன் எனது கல்லூரி தோழர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மன்னார்குடி ருக்மணிகுளம் பகுதிக்கு எதற்காக சென்றிருந்தேன், எவ்வளவு நேரம் அங்கு இருந்தேன் என்ற விவரத்தை போலீசார் என்னிடம் விசாரிக்கவும் இல்லை, நான் சொல்லவும் இல்லை. நான் சொல்லும் மன்னார்குடி ருக்மணிகுளம் கீழ்கரையில் நிழல் தரும் இடங்களோ , கடைகளோ, வீடுகளோ இல்லாத நிலையில் காலை 11.00 மணிக்கு அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றிய வாகனம் என்ன கலர் வண்டி என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பல்சர் வண்டியில் 6 மாடல்கள் உள்ளது என்றும் அதில் என்ன மாடல் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 6 மாடல்கள் வண்டி உள்ளது பற்றி தெரியாது.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi